இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 17 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 11 – புதன்கிழமை 27 ஆகஸ்ட் 2025 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 17 : Thiruvalluvar Year - 2056 - Aavani 11 - Wednesday 27 August 2025 - Chennai 12 Pages ₹ 5.00

## உலகிற்கே முன்னோடியான காலை உணவுத் திட்டம் செலவு அல்ல!

# தமிழ்ச் சமூகத்திற்கான எதிர்கால முதலீடு!

## முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட விரிவாக்கத் தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக.27-**

**“மாணவ, மாணவியர்க்கான உலகிற்கே முன்னோடியான காலை உணவுத் திட்டம் செலவு அல்ல! தமிழ்ச் சமூகத்திற்கான எதிர்கால முதலீடு!” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட விரிவாக்கத் தொடக்க விழாவில் உரையாற்றும்போது பெருமிதத்துடன் கூறினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்அவர்கள்நேற்று(26.8.2025) சென்னை, மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, நகர்ப்புற பகுதிகளில் செயல்படும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவு படுத்தி தொடங்கிவைத்து ஆற்றிய உரை வருமாறு:-

“இனி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலம் 37,416 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவர்”

காலையில் இங்கே வந்து குழந்தைங்கள் கூட உணவு சாப்பிட்டவுடனே, இந்தக் குழந்தைகளைப் போலவே, எனக்கும் எனர்ஜி வந்துவிட்டது! எப்படி இன்றைக்கு முழுவதும் நீங்கள் ஆக்டிவாக இருப்பீர்களோ, அப்படி எனக்கும் இது ஆக்டிவான டே தான்! ஆக்டிவான டே மட்டுமல்ல, மனதுக்கு மிகவும் நிறைவான நாள்!





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.8.2025) சென்னை, மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில், சென்னை மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, நகர்ப்புற பகுதிகளில் செயல்படும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி, மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கி, அவர்களுடன் உணவு அருந்தினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் திருமதி கீதா ஜீவன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், மேயர் திருமதி ஆர்.பிரியா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ அருண், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் இயக்குநர் மருத்துவர் சௌமியா சுவாமிநாதன், பள்ளி தலைமை ஆசிரியர் அருட் சகோதரி ரெஜினா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்தால் இருபது இலட்சம் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள் என்றால், இதைவிட மனநிறைவு என்ன இருக்க முடியும்? அடுத்து, இது மகிழ்ச்சிக்குரிய நாளும்கூட! ஏனென்றால், Hon’ble பஞ்சாப் சி.எம் My younger friend பகவந்த் மான் அவர்கள் இங்கே வந்திருக்கிறார். On behalf of the people of Tamil Nadu, I welcome you!

இதற்கு முன்பு, இப்போது நாடே திரும்பிப் பார்க்கின்ற புதுமைப்பெண் திட்டத்தை தொடங்கி வைப்பதற்கு, டெல்லியின் முதலமைச்சராக இருந்த அரவிந்த் கெஜ்ரிவால் வந்தார். இப்போது இந்த திட்டத்திற்கு பகவந்த் மான் வந்திருக்கிறார்.

**பஞ்சாப் முதல்வருக்கு நன்றி!**

தன்னுடைய பல்வேறு பணிகளுக்கிடையே நேரம் ஒதுக்கி வருகை தந்திருக்கக்கூடிய பஞ்சாப் முதலமைச்சருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி!

“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு” என்று சொன்னார் வான்புகழ் வள்ளுவர். அதாவது, பசியும், பிணியும், பகையும் இல்லாத நாடுதான் சிறந்த நாடாக பாராட்டப்படும்! என்று சொல்லியிருக்கிறார். வள்ளுவர் வாக்குக்கு இலக்கணமாக இன்றைய நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. கல்வி அறிவை வழங்குவதால் மட்டும் பள்ளிகள் இருக்கக் கூடாது, அவர்கள் வயிற்றுப் பசியையும் போக்கவேண்டும் என்று நீதிக்கட்சி ஆட்சி நடைபெற்ற போது, சென்னை மாநகராட்சியில் படிக்கக்கூடிய, பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, பெருந்தலைவர் காமராசர் ஆட்சியில் மதிய உணவுத் திட்டம் செயல்பாட்டிற்கு வந்தது. இதன் தொடர்ச்சியாக காலை உணவுத் திட்டத்தை நம்முடைய திராவிட மாடல் அரசு தொடங்கினோம்.

**இந்தத் திட்டம் துவங்க காரணம்!**

இந்தத் திட்டத்தை துவங்குவதற்குக்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

---

## ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ மிகவும் சிறப்பான திட்டம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஓர் உண்மையான மக்கள் தலைவர்!

## விழாவில் பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் புகழாரம்!

## பஞ்சாப் மாநிலத்திலும் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும்!

**சென்னை, ஆக.27-**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மிகவும் சிறப்பான திட்டம்! முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஓர் உண்மையான மக்கள் தலைவர்! தமிழ்நாட்டைப் பின்பற்றி பஞ்சாப் மாநில அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்! என்று பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் தெரிவித்தார்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்புத் திட்டமான பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் இத்திட்டத்தின் விரிவாக்க விழா சென்னை மயிலாப்பூர் புனித ஜோசப் தொடக்கப்பள்ளியில் நேற்று (26.8.2025) நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்பான அழைப்பினை ஏற்று பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று முதலமைச்சர் அவர்களை பாராட்டியதுடன் பஞ்சாப் மாநில அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்புக்கு பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்கள் முதலில் நன்றி தெரிவித்தார், அத்துடன், கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு ஆகிய துறைகளில் தமிழ்நாடு அரசின் சிறந்த பணிகளைப் பாராட்டினார். பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களுக்கும் இடையிலான வலுவான உறவைச் சுட்டிக்காட்டிய பஞ்சாப் முதல்வர் அவர்கள், காலை உணவு திட்டம் போன்ற நலத்திட்டங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

**தமிழ்நாட்டைப் பார்த்து பெருமைப்படுகிறேன்!**

“எங்கள் மாநிலத்திலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நாங்கள் பரிசீலனை செய்து வருகிறோம்,” என்று பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் கூறினார். இத்திட்டத்தால் தமிழ்நாட்டில் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் பயனடைகிறார்கள் என்பதை அறிந்து பெருமைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் நகர்ப்புறப் பள்ளிகளையும் உள்ளடக்கி இந்தத் திட்டம் இன்று விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு சத்தான உணவை வழங்குதல், வருகையை அதிகரித்தல், கற்றல் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. முக்கிய சமூகப் பிரச்சினைகளைக் கையாள்வதிலும், பொது நலனுக்காக வெற்றிகரமான திட்டங்களை ஏற்றுக் கொள்வதிலும் மாநிலங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களின் தமிழ்நாட்டு வருகை வெளிப்படுத்துகிறது.

**கல்வித் திறனை உயர்த்தும்!**

தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குச் சத்தான காலை உணவை வழங்குவதற்காகத் தமிழ்நாடு அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டத்தை தொடங்கியுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் ஆரோக்கியமான உணவை நாள்தோறும் உண்டு கல்விப் பணிகளை தொடங்குகிறார்கள். இது குழந்தைகளின் ஆரோக்கியம், பள்ளி வருகை மற்றும் கல்வித் திறனை மேம்படுத்த உதவுகிறது என்று பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்கள் கூறினார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பார்க்கும் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓர் உண்மையான மக்கள் தலைவர் என்பதை உணர முடிகிறது.

இங்கே அமர்ந்திருக்கும் மாணவ, மாணவியரே, இது உங்களுக்கான திட்டம்தான் இந்த திராவிட மாடல் அரசு உங்களுக்காகத் தான் இதை செய்திருக்கிறது. உங்களுக்காக உழைக்கும் சிறந்த முதலமைச்சர் இவர் தான் என்று முதலமைச்சர் அவர்களைச் சுட்டிக் காட்டி குறிப்பிட்டார். தொடர்ந்து, “நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?” என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்ட போது மாணவர்களிடம் இருந்து பலத்த ஆரவாரத்துடன் “ஆம்” என்று மகிழ்ச்சியான முழக்கம் பதிலாகக் கிடைத்தது.

தொடர்ந்து பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்கள் பேசும் போது,

“தமிழ்நாட்டின் காலை உணவுத் திட்டம் ஒரு மிகவும் புதுமையான திட்டம். இது ஒன்றிய அரசுக்கும் பிற மாநிலங்களுக்கும் ஒரு முன்மாதிரி திட்டமாக விளங்குகிறது. இந்த சிறப்பான காலை உணவுத் திட்டத்தை எங்கள் அமைச்சரவையில் விவாதித்து பஞ்சாப் மாநிலத்திலும் கொண்டுவர உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” என்று குறிப்பிட்டார்.